<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி</u>

**<u>O.S.No. 271 /2025</u>**

19.02.2026 வாசா.1 திரு. மாடசாமி

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. பிரச்சனைக்குரிய தபசில் சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 1 ஏக்கர் 28 செண்ட். அரசு வருவாய் ஆவணங்களின் படி தாவா சொத்தானது அரசு புறம்போக்கு நிலம் என்றால் சரிதான். நான் குடியிருக்கும் வீட்டில் இருந்து தாவா சொத்து எவ்வளவு துூரத்தில் இருக்கும் என்றால் ஒரு கிலோமீட்டர் துூரம். வழக்கில் உள்ள மற்ற வாதிகள் எனக்கு என்ன வேண்டும் என்றால் சரஸ்வதி எனது சித்தி, 3–ம் வாதி எனது அக்கா, மாலதி தங்கச்சி, 4 முதல் 6 வரையிலான வாதிகள் எனது சகோதரர்கள்.
2. நான் குடியிருக்கும் வீட்டின் கதவு எண் என்ன என்றால் 1/132 புதுக்குளம் தெரு, களக்குடி கிராமம். தாவா சொத்தானது காலிமனையாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிராது மற்றும் முதல் விசாரணைக்காக நிருபண வாக்குமூலத்தில் தாவா சொத்து கட்டிடம் கட்டி குடியிருந்து வருவதாக குறிப்பிட்டுள்ளது தவறு என்றால் நாங்கள் குடியிருக்கவில்லை ஆடு, மாடு கட்டி தொழுவம் அமைத்து பராமரித்து வருகிறோம். கட்டிடம் இடிந்த நிலையில் உள்ளது. கட்டிடம் இடிந்த நிலையில் உள்ள பற்றியோ ஆடு, மாடு தொழுவம் உள்ளது பற்றியோ பிராதில் சொல்லாததற்கு காரணம் இல்லை என்று சொன்னால் சரிதான்
3. வழக்குப்படி தாவா சொத்து நத்தமாக உள்ளதா அல்லது புஞ்சையாக உள்ளதா என்றால் நத்தம். முன்பு புஞ்சையாக இருந்து தற்போது நத்தமாக மாறி உள்ளது என பிராதில் சொல்லப்பட்டுள்ளது என்றால் தவறு. வழக்கு தாக்கல் செய்வதற்கு தகவல் சொன்னது நான் தான் என்றால் சரிதான். தாவா சொத்தை வாதிகள் அனைவரும் அனுபவம் செய்து வருவதை

காட்டுவதற்கு எந்த ஆவணமும் இல்லை என்றால் சரிதான் ஆனால் வரி கட்டியுள்ளோம். நான் வரி செலுத்தியதற்கான எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

4. அசல் வழக்கு எண். 248/2015 ல் அரசாங்கம் ஒரு தரப்பினர் இல்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி வழக்கில் இந்த வழக்கில் உள்ள வாதிகள் அனைவரும் பிரதிவாதிகள் என்று சொன்னால் சரிதான். மேற்படி வழக்கு எனக்கு விரோதமாக தீர்ப்பாகி உள்ளது என்று சொன்னால் சரிதான். வாசாஆ 1 தபசில் விவரத்தில், வேல் நாடார் நிலம் என்பது பென்சிலால் கோடிடப்பட்டு வேறு ஒரு பெயர் எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.
5. வாசாஆ.1 ஆன தீர்ப்பாணைக்கு எதிராக மேல்முறையீடு செய்யப்படவில்லை என்று சொன்னால் சரிதான. வாசாஆ.1 ல் சொத்தில் விஸ்தீரணம் அடித்து எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாசாஆ.1 நான்கு மால் எல்கையில் எந்த இடத்திலாவது எனக்கோ மற்ற வாதிகளுக்கோ சொத்து இருப்பதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வாசாஆ.1 தீர்ப்பாணையில் பிரதிவாதிகள் தரப்பினர் இல்லை என்பதால் அவர்களை மேற்படி தீர்ப்பாணை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.
6. 02.03.2021 ல் பிரதிவாதிகள் எங்களது அனுபவத்தை பிரதிவாதிகள் இடைஞ்சல் செய்வதாக பிராதில் குறிப்பிட்டுள்ளது என்றால் அவ்வாறு இல்லை. இந்த வழக்கானது ஆனது 02.03.2021 ம் தேதிக்கு பின்னர் 4 ஆண்டுகள் கழித்து தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் முந்தைய வழக்கறிஞர் இறந்து விட்டதால் நான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன்.
7. என்னிடம் காட்டப்படும் அ பதிவேடு தபசில் சொத்திற்கானது என்று சொன்னால் சரிதான். **அ பதிவேட்டின் சான்றிட்ட நகல் பிவாசாஆ.1**. என்னிடம் காட்டப்படும் புலவரைபடம் தபசில் சொத்திற்கானது என்றால் சரிதான். **தபசில் சொத்தின் புலவரைபடம் பிவாசாஆ.2.** தபசில் சொத்தில்

எனக்கோ மற்ற வாதிகளுக்கோ எந்த உரிமையோ அனுபவமோ எந்த காலத்திலும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அரசுக்கு பாத்தியப்பட்ட புறம்போக்கு இடத்தை அபகரிக்கவேண்டும் என்பதற்காக உண்மையை மறைத்து பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.

MARIMUTHU R MUNIYASAMY
Deposition uploaded on 19.02.2026
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2026.02.19 18:10:59 +0530

Principal District Munsif,
Tirunelveli.